1993 ஏப்ரல் 12]

310—

பாலப்பட்டியிலிருந்து ஆட்டோ நகர் வரையுள்ள கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*10455—திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) பாலப்பட்டியிலிருந்து வள்ளிபுரம் வழியாக ஆட்டோ நகர் வரையுள்ள வழித்தட கிராமங்களுக்கு கூட்டுக்குடிநீர்த் திட்டம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உருவாக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

(அ) இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்விலுள்ளது.

(ஆ) ஆய்வுப்பணிகளை 4/93-க்குள் முடித்து, திட்ட மதிப்பீடு தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு உரிய, நிர்வாக மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல்கள் பெறப்பட்ட பின்னர், திட்டப் பணிகள் துவங்கப்படும்.

314—

வால்பாறை சவமலை காப்பித் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதி, ஊதியம் வழங்கல்

*11572—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை குன்றுகள் கிராமம், சவமலை காப்பித் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போதிய அடிப்படை வசதியும், ஊதியமும் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) விவர அறிக்கை தனியாக வைக்கப்பட்டுள்ளது

(ஆ) எழாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1993 ஏப்ரல் 12

அறிக்கை

1. குடிநீர் வசதி : மானம்பள்ளி (சவமலை) காப்பித் தோட்ட நிறுவனத்தில் கட்டப்பட்டுள்ள எல்லா குடியிருப்புகளுக்கும் குழாய் மூலமாக குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

2. மின்சார விளக்கு வசதி : இந்நிறுவனத்தில் மொத்தம் 197 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கட்டப்பட்டுள்ள எல்லா வீடுகளுக்கும் மின் இணைப்பு வசதியும் மற்றும் சிமெண்ட் தளம் வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

3. கழிவறை வசதி : நிறுவனத்தில் கட்டப்பட்டுள்ள ஒவ்வொரு தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கும், தனித்தனியாக கழிவறை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

4. மருத்துவ வசதி : இந்நிறுவனத்தில் ஒரு மருத்துவ சாலை (Dispensary) உள்ளது. இதில் ஒரு மருந்தாளுநர் நிரந்தரமாக பணியாற்றி வருகிறார். வாரத்திற்கு இரண்டு முறை, வால்பாறையில் இருந்து தனியாக மருத்துவர் சென்று நோயாளிகளைப் பார்வையிட்டு வருகிறார். அவ்வாறு அளிக்கப்படும் சிகிச்சையில் குணமாகாத நோயாளிகளை அருகாமையிலுள்ள டாடா டீ லிமிடெட் நிறுவனத்தில் உருளிக்கல் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தும், அதற்காக ஏற்படும் மருத்துவ செலவுத் தொகையை நிர்வாகமே பட்டுவாடா செய்தும், மருத்துவ வசதி செய்து கொடுத்தும் வருகிறது.

5. சிற்றுண்டிச்சாலை : நிறுவனத்தில் ஒரு சிற்றுண்டிச்சாலை உள்ளது. தினமும் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தினரால் இலவச டீ கொடுக்கப்பட்டு வருகிறது.

6. குழந்தைகள் காப்பக வசதி : இந்நிறுவனத்தில் ஒரு குழந்தைகள் காப்பகம் உள்ளது. இதில் பயிற்சி பெற்ற ஒரு ஆயாவும் மற்றும் ஒரு துப்புரவுப் பணியாளரும் இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு பால், சாப்பாடு மற்றும் முட்டை ஆகியவைகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகள் காப்பகத்தில் போதிய விளையாட்டுப் பொருட்களும் நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டுள்ளன.

7. மனமகிழ் மன்றம் : தொழிலாளர்களுக்கு ஒரு மனமகிழ் மன்ற வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதில் கேரம் போர்டு, செஸ் போர்டு, மற்றும் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

8. கல்வி வசதி : நிறுவனத்தில் 1 முதல் 5 வரை பயில பள்ளிக்கூட வசதி உள்ளது. மேற்படிப்பிற்கு குழந்தைகள் வெளியூருக்குச் செல்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 12]

9. குடியிருப்பு வசதி : தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குடியிருப்புகளுக்கு விதிப்படி குடிதண்ணீர் வசதியும் மின்சார விளக்கு வசதியும் மற்றும் சிமெண்ட் தள வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் குடியிருப்புகளில் பழுதுகள் ஏற்படும்போது அவ்வப்போது நிர்வாகத்தினரால் பழுதுகள் சரி செய்யப்பட்டு வருகின்றன.

சவமலை காப்பி தோட்ட தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதிய சட்டத்தின் கீழ் அரசாணை எண் 1171, நாள் 11—6—1985-ன்படி குறைந்த பட்ச ஊதியம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

2, ஒத்திவைப்புத் தீர்மானம்

சந்தனமரக் கடத்தலில் ஈடுபடும் வீரப்பன் கும்பலைப் பிடிக்கச் சென்ற காவல் துறையினர் 9—4—1993 அன்று கண்ணிவெடி விபத்தில் மரணமடைந்தது குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சந்தனக் கடத்தல் பேர்வழி வீரப்பனைப் பிடிக்கச் சென்றபோது ஏற்பட்ட சம்பவம் குறித்து அரசின் சார்பில் பேரவை விதி 110-இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அறிக்கை வைக்கிறேன் எனக் கேட்டிருந்தார்கள், இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்திருப்பதற்கு இணங்க அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியதை ஏற்று அது ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ச. இராமச்சந்திரன், திரு.வி. தண்டாயுதபாணி, திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் திரு. பி. வி. இராஜேந்திரன், டாக்டர் தே. குமாரதாஸ் திரு. ஆர். சிங்காரம், திரு ப. ரங்கநாதன், திரு. சி. சுவாமிநாதன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. கே. செல்வராஜ். திரு. ச. அழகிரி, திரு. எஸ். டேனியல்ராஜ், திருமதி ரமணி நல்லதம்பி ஆகியோர் சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டுள்ள வீரப்பனைப் பிடிக்கச் சென்ற அதிரடிப்படையினரை கண்ணி வெடிகள் மூலம் தாக்கியதால் 7 காவல் துறையினர் உட்பட 22